09.04.2025

IDOP. No. 25/2017

**ம.சா.1 – ஜான் ஆப் ஆர்க்**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:–</u>**

என் கணவர் வீட்டில் அவருடைய அப்பா, அம்மா ஆகியோர் உடன் இருந்தார்கள். என் கணவரின் அப்பாவின் வயது 75 என்றால் சரிதான். அவர் ஓய்வு பெற்ற ஆசிரியர். அவர் ஓய்வூதியம் பெற்று வருகிறார் என்றால் சரிதான். அவருக்கு வங்கி கணக்கு உண்டா என்று எனக்கு தெரியாது. பென்சன் தொகை வங்கிக் கணக்கில்தான் போடுவார்கள் என்றால் சரிதான். என் கணவரின் அண்ணன் ஆசிரியராக வேலை செய்கிறார். புரத்தாக்குடியில் அவருக்கு தனியாக வீடு உள்ளதா என்றால் உள்ளது. அவருடைய மற்றொரு அண்ணனும் ஆசிரியராக வேலை செய்கிறார் என்றால் சரிதான். அந்த அண்ணனுக்கு புரத்தாக்குடியிலும், திருச்சியிலும் வீடு உள்ளது என்றால் சரிதான். என்னுடைய மூத்த அக்கா தற்கொலை செய்துகொண்டார் என்றால் சரிதான். அவர் ஒரு இந்து நபரை காதலித்தார் என்றால் சரிதான். அதுசம்பந்தமாக என் அப்பா புகார் கொடுத்து காவல்நிலையத்தில் அந்த நபரை அடித்து சித்ரவதை செய்தார்கள் என்றால் தவறு. அந்த பிரச்சனையில்தான் என் அக்கா தற்கொலை செய்துகொண்டார் என்றால் சரியல்ல. அந்த நபரும் வேறு திருமணம் செய்துகொள்ளாமல், குடித்து குடித்து இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. என் வீட்டில் தற்போது நான், என் அப்பா, அம்மா மற்றொரு அக்கா உள்ளார்களா என்றால், நான் என் அப்பா, அம்மா மற்றும் மகனுடன் வசித்து வருகிறேன். என் அக்காவும், என் அக்கா கணவரும் எங்கள் வீட்டில்தான் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் தனியாக வசிக்கிறார்கள், இரண்டு தெரு தள்ளி இருக்கிறார்கள். என் அக்கா கணவர்மீது என் தகப்பனார் போலீசில் புகார் கொடுத்து அவரையும் சித்திரவதை செய்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் எல்லார்மீதும் புகார் கொடுப்பது, அதுசம்பந்தமாக வழக்குகள் நடப்பது என்ற அடிப்படையில், அவருக்கு நீதிமன்றம் நல்ல பழக்கமானது என்றால் சரியல்ல. என் அப்பா வீட்டிற்கும் என் கணவர் வீட்டிற்கும் இடையே 300 அடி தூரம் ../

இருக்கும். எனக்கு திருமணமானபோது நான் M.Sc. முதலாமாண்டு படித்தேன் என்றால் சரிதான். என் கணவர் சென்னையில் வேலைப்பார்த்தார் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு என் கணவர் வீட்டில் இருந்துதான் M.Sc. படித்தேன். என் கணவர் தாக்கல் செய்த வழக்கில், நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் என் கணவர் கேட்டுக்கொண்டபடி, என் பெற்றோர் வீட்டில் இருந்துதான் M.Sc. படித்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இரண்டு வீடும் அருகருகே இருப்பதால் அவ்வாறு சொல்லியுள்ளேன். என் கணவர் சென்னையில் இருந்து வரும்போது மட்டும்தான் என் கணவர் வீட்டிற்கு செல்வேன் என்றாலும், மற்ற நாட்களில் என் பெற்றோர் வீட்டில்தான் இருப்பேன் என்றால் சரியல்ல. என் கணவர் அவருடைய வீட்டில் தங்க சொல்லியபோது, நான் என்ன உங்கள் வீட்டு வேலைக்காரியா என்று கேட்டு அவருக்கு குறுஞ்செய்தி அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. கணவர் வீட்டில் ஒரு படுக்கையறையும், கழிவறையுடன் இணைக்கப்பட்டிருந்ததை AC போட்டிருந்தார்களா என்றால், குழந்தை பிறந்த பிறகு போட்டார்கள். அந்த அறை இல்லாமல் மற்றொரு அறையும், ஹாலும் இருந்தது என்றால் சரிதான். அந்த வீட்டுக்கு பின்னால் ஒரு ஓட்டுவில்லை வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த ஓட்டு வீட்டில்தான் என் மாமனார், மாமியார் இருந்தார்கள் என்றால், என் மாமியார் இந்த வீட்டில்தான் இருந்தார்கள், மாமனார் ஓட்டு வீட்டில் இருந்தார். மாமனார் சாப்பிடுவதற்கும் தூங்குவதற்கும் காரை வீட்டிற்கு வந்துவிடுவார். நான் சொல்வது தவறு என்றாலும், இருவரும் ஓட்டு வீட்டில்தான் வசித்து வந்தார்கள் என்றாலும் சரியல்ல. 100 நாள் வேலைக்கு என்ன போகச்சொன்னார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நகைகளை அடமானம் வைத்து பணம் கொடுத்தேன் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால், அது என் மாமியார் பெயரில்தான் வைத்தார்கள். அந்த நகைகளை எனக்கு மீட்டுக்கொடுத்துவிட்டார்கள். என் மாமியாரின் பெயரில் நகையை எதுவும் அடகு வைக்கவில்லை என்றாலும், நான் சொல்வதுபோல் அதை திருப்பிக்கொடுத்திருக்கிறார்கள் என்றாலும் சரியல்ல. M.Sc., முடித்த பிறகு ../

நான் சென்னையில் எவ்வளவு காலம் இருந்தேன் என்றால், சுமார் ஒன்றரை ஆண்டு காலம் இருந்தேன், அப்போது M.Phil. படித்ததால், நான் சென்னையில் இருந்து இங்கு வந்து செல்வதாக இருந்தேன். நான் M.Sc. முடித்தவுடன் B.Ed. படித்தேன், அதன்பிறகு M.Phil. படித்தேன், அந்த படிப்பிற்காக ஒரு சில மாதங்கள் புரத்தாக்குடியில் இருந்தேன். சென்னைக்கு சென்றுவிட்டு நான்கு மாதத்தில் திருச்சிக்கு வந்தேன் என்றால் சரிதான். B.Ed., M.Phil. மற்றும் TET Exam ஆகியவற்றிற்கு என் கணவர்தான் செலவு செய்தார் என்றால் தவறு, என் அப்பாதான் செலவு செய்தார். சென்னையில் நான் என் கணவருடன் தங்கியிருந்தபோது வாரம் வாரம் என் அப்பா அங்கு வந்துவிடுவாரா என்றால் இல்லை. என் அப்பா வராத வாரங்களில் நான் அங்கிருந்து கிளம்பி வந்துவிடுவேனா என்றால் சரியல்ல, என் கணவருடன் தான் வந்திருக்கிறேன். நான் வந்து செல்வதற்கும், என் அப்பா வந்து செல்வதற்கும் பிரயாண கட்டணத்தை என் கணவர்தான் செலுத்தினார் என்றால் சரியல்ல. நான் வந்து செல்வது என்றால், என் அப்பா பணம் போட்டுவிடுவார். B.Ed. Seat என் அப்பாதான் வாங்கிக்கொடுத்தார். B.Ed., M.Phil., TET படிப்பதற்காக நான் புரத்தாக்குடியில் என் பெற்றோர் வீட்டில்தான் இருந்தேன் என்றாலும், ஒரு சில மாதங்கள் மட்டுமே சென்னையில் தங்கியிருந்தேன் என்றாலும் சரியல்ல. எனக்கு சரிவர சாப்பாடு கொடுக்கவில்லை என்றும், எனக்கு கருக்கலைப்பு ஏற்பட்டது என்றும் மனுவில் சொல்லியுள்ள விவரத்தை, என் கணவர் அனுப்பிய அறிவிப்பிற்கு, நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால், சரியல்ல சொல்லியுள்ளேன்.

**(குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.